**அ.வ.எண். 395/2022**
**பி.வா.சா.2 : உதயகுமார்**
**தேதி : 09.03.2026**
**<u>சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,</u>**
**<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

எனக்கும் 1, 2 வாதிகளின் தகப்பானருக்கும் கடந்த 40 ஆண்டுகளாக பழக்கம் உள்ளது. 1, 2 வாதிகளின் தகப்பனார் மலேசியாவிலிருந்து எப்போது திருச்சி வந்தாலும் என்னை பார்த்துவிட்டு செல்வார். 1, 2 வாதிகளின் தகப்பனார் சங்கப்பிள்ளை மலேசியாவில் முடி திருத்தும் கடை வைத்திருந்தார். வாதிகளின் தகப்பனார் சங்கப்பிள்ளை மலேசியாவில் இருப்பார் தாளப்பட்டி கிராமத்தில் கொடையூர் கிராமத்திலும் இருப்பார். 1, 2 வாதிகளின் தகப்பனார் சங்கப்பிள்ளையின் குடும்பம் திருச்சியில் குடியிருந்து வந்தார்கள். சங்கப்பிள்ளையின் வருமானம் குறித்து எனக்கு தெரியாது. சங்கப்பிள்ளை அவரது சகோதரர் கிருஷ்ணனின் வாரிசான கேசவனிடமிருந்து 3ல் 1 பங்கு பிரிக்கப்படாத சொத்தை வாங்கியுள்ளார் என்று சொன்னால் சரிதான். பாப்பாயியம்மாள் கணேசா வகையராவிடமிருந்து 3ல் 1 பங்கு கிரையம் வாங்கியுள்ளார் என்று சொன்னால் சரிதான். பாப்பாயியம்மாளுக்கு சங்கப்பிள்ளை பழனிச்சாமி தான் வாரிசுகள் என்றால் சரிதான். சங்கப்பிள்ளை வாரிசுகளுக்கு மொத்த சொத்தில் 3 ல் 2 பங்கு பாத்தியம் என்று சொன்னால் சரிதான். பழனிச்சாமி சங்கப்பிள்ளையையும், பாப்பாயியம்மாளையும் பார்த்துக்கொண்டார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் ரியல்எஸ்டேட் தொழில் செய்து வருகிறீர்கள் என்று சொன்னால்

சரியல்ல விவசாயம் செய்து வருகிறேன். நீங்கள் பிரதிவாதிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் கோரியவாறு பரிகாரம் கிடைக்கவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN Digitally signed by ELAVAZHAGAN Date: 2026.03.09 19:15:26 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.